W.S. Industries (India) Limited

28th January, 2026

WSI/SECTL/SE/25-26/92

M/s.BSE Ltd.
Phiroze Jeejeebhoy Towers, 25th Floor,
Dalal Street, Mumbai – 400 001.
Scrip Code: 504220.

M/s.National Stock Exchange of India Ltd
Regd. Office: "Exchange Plaza"
Bandra (East), Mumbai -400 051.
Symbol: WSI

Dear Sir,

Sub: Submission of copies of newspaper advertisement - Notice of 3rd Extra-Ordinary General Meeting (EGM) for the FY 2025-26

In compliance with Regulations 30 (Disclosure of events or information) and 47 (Publication of notices) of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we hereby submit copies of the newspaper advertisements published in respect of the Notice convening the 3rd Extra-Ordinary General Meeting (EGM) of the Company for the FY 2025-26.

The aforesaid advertisements were published on 28.01.2026, in the following newspapers:

- Business Standard
- Makkal Kural

The said advertisements have also been uploaded on the Company's website at www.wsindustries.in

This is submitted for your information and records.

Thanking you,
Yours Faithfully

For W.S. INDUSTRIES (INDIA) LIMITED

BALAMURUGAN VETRIVEL
Digitally signed by BALAMURUGAN VETRIVEL
Date: 2026.01.28 15:31:29 +05'30'

V. Balamurugan
Company Secretary

Encl: Copies of newspaper advertisements

W.S. INDUSTRIES (INDIA) LIMITED

CIN: L42909TN1961PLC004568
Regd. Office: 3rd Floor, New No.48, Old No. 21, Savidhaanu Building, Casa Major Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu, India
Email ID: sectl@wsigroup.in Website: www.wsindustries.in

NOTICE FOR THE 3rd EXTRA-ORDINARY GENERAL MEETING OF THE FY 2025 - 26 TO BE HELD THROUGH VIDEO CONFERENCE (VC) OR OTHER AUDIO-VISUAL MEANS (OAVM) AND E-VOTING INFORMATION

Notice is hereby given that

1. The 3rd Extra-Ordinary General Meeting of the FY 2025 - 26 ("3rd EGM") of the Company will be held on Friday, the 20th February 2026, at 2.30 P.M. IST through Video Conference (VC) or Other Audio Visual Means (OAVM) to transact the business as set out in the Notice dated 21st January 2026 of the said EGM.
2. The Ministry of Corporate Affairs ("MCA") has, vide its General Circular No. 03/2025 dated September 22, 2025, circular issued by SEBI vide circular no. SEBI/ HO/ CFD/ CFDPoD-2/ P/ CIR/ 2024/ 133 dated October 3, 2024, read with General Circulars No. 17 / 2020 and 14 / 2020 dated May 5, 2020, April 13, 2020 and April 8, 2020, respectively (collectively referred to as "MCA Circulars"), read with Circular No. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62, Circular No. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 and Circular number SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated – May 13, 2022, January 15, 2021 and May 12, 2020 respectively issued by the Securities and Exchange Board of India (SEBI), permitted holding of Extra-Ordinary General Meeting ("EGM") through VC / OAVM, without the physical presence of the Members at a common venue. In compliance with the provisions of the Companies Act, 2013 ("Act"), SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI Listing Regulations") and MCA / SEBI Circulars, this 3RD EGM of the Company is being held through VC / OAVM.
3. **Option to Pose Questions:** In terms of MCA General Circular No. 14/2020, shareholders may either pose questions during the EGM or submit them in advance, and the Circular mandates that a company may provide any one of these options. The Company has decided to provide the facility for shareholders to submit questions in advance. Shareholders who wish to do so may send their queries at least seven (7) days before the meeting, i.e., on or before 13th February 2026, along with their name, DP ID and Client ID or folio number, email ID, and mobile number to **sectl@wsigroup.in** The Company will suitably address all such questions during the 3rd EGM, and shareholders are encouraged to submit queries in advance to enable proper and informed responses.
4. In compliance with the provisions of Section 108 of the Companies Act, 2013 and Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, as amended by the Companies (Management and Administration) Amendment Rules, 2015 and Listing Regulations, the Company is pleased to provide its members holding shares either in physical form or in dematerialized form, as on the cut-off date being 13th February 2026, with facility of e-voting ("remote e-voting") for the 3rd EGM, through electronic services provided by National Securities Depository Ltd. (NSDL) to enable them to cast their vote on all the resolutions as set out in the said Notice.

All the members are informed that:

i. All the Businesses as set out in the Notice dated 21st January 2026 may be transacted through electronic means by remote e-voting.
ii. The Notice convening the 3rd Extra-Ordinary General Meeting was sent in electronic form on 27th January 2026 to those Members of the company whose email addresses are registered with the company/Depository Participants as on 23rd January 2026.
iii. The date and time of commencement of remote e-voting: 17th February 2026 at 9.00 AM.
iv. The date and time of end of remote e-voting: 19th February 2026 at 5.00 PM.
v. The cut-off date for determining the eligibility to vote by remote e-voting or at the 3rd EGM and determination of e-voting rights: 13th February 2026.
vi. Those persons who have acquired shares and have become members of the Company after the dispatch of Notice of 3rd EGM through electronic form and holding shares as of the cut-off date i.e. 13th February 2026, may obtain the login ID and password by sending a request at evoting@nsdl.co.in or yuvraj@integratedindia.in. However, if you are already registered with NSDL for remote e-voting then you can use your existing user ID and password for casting your vote.
vii. The remote e-voting module shall be disabled by NSDL for voting after 5.00 PM on 19th February 2026. Once the vote on a resolution is cast by the member, the member shall not be allowed to change it subsequently.
viii. Only those Members/Shareholders, who will be present in the said EGM through VC/OVAM facility and have not casted their vote on the Resolutions through remote e-voting and are not barred from doing so, shall be eligible to vote through e-voting system in the EGM.
ix. A member may participate in the 3rd EGM even after exercising his right to vote through remote e-voting but shall not be allowed to vote again at the said EGM.
x. The attendance of the members attending the 3rd EGM through VC/OAVM will be counted for the purpose of reckoning the quorum under section 103 of the Companies Act, 2013.
xi. Members whose name is recorded in the register of members or in the register of beneficial owners maintained by the depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting as well as voting at the 3rd EGM.
xii. Website address of the Company, where Notice of EGM is displayed: **www.wsindustries.in** and also on the website of Stock Exchanges i.e. BSE Limited and National Stock Exchange of India Limited at www.bseindia.com and www.nseindia.com respectively and on the website of National Securities Depository Limited (NSDL), agency for providing the Remote e-Voting facility i.e. **https://www.evoting.nsdl.com**.
xiii. In case of any queries, members may refer the Frequently Asked Questions (FAQs) for members and remote e-voting user manual for members available at the Downloads section of **www.evoting.nsdl.com** or call at **022 - 4886 7000**.
xiv. The Company has appointed Ms.Lakshmmi Subramanian & Associates, Practising Company Secretaries as the scrutinizer for conducting the remote e-voting and also e-voting process during the 3rd EGM in a fair and transparent manner.
xv. Contact details of the person responsible to address the grievances connected with remote e-voting:- W.S.Industries (India) Limited, Mr. V. Balamurugan, Company Secretary, Address: 3rd Floor, New No.48, Old No. 21, Savidhaanu Building, Casa Major Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu, India. Email Id: **sectl@wsigroup.in.**
xvi. Please keep your updated email ID registered with the RTA/ your Depository Participant to receive timely communication.

By Order of the Board of Directors of
W.S.Industries (India) Limited
V. Balamurugan
Company Secretary

Place : Chennai
Date : 28.01.2026

AmulFed Dairy (A Unit of Gujarat Cooperative Milk Marketing Federation Ltd)

TENDER NOTICE

AmulFed Dairy is one of the advanced state-of-the-art plants in Asia. AmulFed Dairy (AFD), Gandhinagar manufactures Milk and Milk products like Milk Powder, Fermented Products, Ice-cream, Ghee, Butter and Long-life milk under the brand name AMUL. AFD invites bids from reputed vendors as per below:

1. Tender for sale of Printed/trim Waste and Unprinted (LDPE/LLDPE rich) film waste from Packaging Film Plant (PFP), Gandhinagar.
2. Tender for Sale of 7-Layer waste UHT Milk Film (EVOH-Based) and Ghee Waste Film (Nylon-Based) from PFP, Gandhinagar.
3. DSITC of Mezzanine floor (Fermented plant) at AFD Gandhinagar.
4. Supply, Installation, Integration, Testing and Commissioning of sleever machine (Capacity- 550 BPM) in existing Aseptic PET bottle filling line at AFD, Gandhinagar.

For further information, please visit our website: www.amul.com/m/tender-notice.

General Manager
AmulFed Dairy, Gandhinagar

Plot No. 35, Nr. Indira Bridge, Village Bhat, Dist: Gandhinagar, Pin: 382428, Phone 079-23969055-56

Amul SAGAR

CREAMLINE DAIRY PRODUCTS LIMITED

Jersey

CIN: U15201TG1986PLC006912
Registered Office : 6-3-1238/B/21, Asif Ave, Raj Bhavan Rd, Somajiguda, Hyderabad, Telangana 500082.
Website : www.creamlinedairy.com **Ph.:**+91-40-23412323 **Fax:** +91-40-23323353
Email: jersey@godrejcdpl.com
[Regulation 33 and Regulation 52 (8), read with Regulation 52 (4) of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (LODR Regulations)]

EXTRACT OF STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED 31 DECEMBER 2025 **Amount - In INR Lakhs**

SL No.	Particulars	Quarter Ended December 31, 2025	Quarter Ended September 30, 2025	Quarter Ended December 31, 2024	Nine Months Ended December 31, 2025	Nine Months Ended December 31, 2024	Year Ended March 31, 2025
		(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
1	Total Income from Operations	37,982.51	39,319.50	36,983.42	118,983.00	120,105.88	158,523.25
2	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items#)	354.73	587.11	584.25	1,551.52	2,426.00	2,785.15
3	Net Profit / (Loss) for the period before Tax, (after Exceptional and/or Extraordinary items#)	3.82	587.11	584.25	1,200.61	2,426.00	2,785.15
4	Net Profit / (Loss) for the period after Tax, (after Exceptional and/or Extraordinary items#)	53.91	466.73	436.11	989.48	1,212.65	1,493.68
5	Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	58.51	471.33	453.01	954.49	1,173.63	1,460.99
6	Paid up Equity Share Capital	1,132.47	1,132.47	1,132.47	1,132.47	1,132.47	1,132.47
7	Reserves (excluding Revaluation Reserve)	12,342.31	12,283.80	11,751.63	12,342.31	11,751.63	12,038.99
8	Securities Premium Account	5,720.20	5,720.20	5,720.20	5,720.20	5,720.20	5,720.20
9	Net worth	13,474.78	13,416.27	12,884.10	13,474.78	12,884.10	13,171.46
10	Paid up Debt Capital/ Outstanding Debt*	15,359.79	14,436.87	14,014.39	15,359.79	14,014.39	16,151.53
11	Outstanding Redeemable Preference Shares	-	-	-	-	-	-
12	Debt Equity Ratio	1.14	1.08	1.09	1.14	1.09	1.23
13	Earnings Per Share (Face Value of Rs.10/- per share) (for continuing and discontinued operations)						
	1. Basic	0.48	4.12	3.85	8.74	10.71	13.19
	2. Diluted	0.48	4.12	3.85	8.74	10.71	13.19
14	Capital Redemption Reserve	-	-	-	-	-	-
15	Debenture Redemption Reserve	990.00	990.00	990.00	990.00	990.00	990.00
16	Debt Service Coverage Ratio	1.86	2.45	0.52	1.51	0.69	0.82
17	Interest Service Coverage Ratio	1.01	2.91	2.84	2.24	3.09	2.87

\# - Exceptional and/or Extraordinary items adjusted in the Statement of Profit and Loss in accordance with Ind AS and applicable Rules there under, whichever is applicable.
* Represents total outstanding debt (Long Term & Short Term) as on the respective dates

Notes :

1 The above is an extract of the detailed format of the Unaudited Financial Results for the Quarter and Nine Months ended 31 December, 2025 filed with the Stock Exchange(s) under Regulation 33 and Regulation 52 of the Securities and Exchange Board of India (Listing obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter and Nine Months ended 31 December, 2025 are available on the website of the National Stock Exchange of India Limited (www.nseindia.com). The same is also made available on the website of the Company (www.creamlinedairy.com).

2 For the other line items referred in regulation 52 (4) of the LODR Regulations, pertinent disclosures have been made to the National Stock Exchange of India Limited and can be accessed on the their website (www.nseindia.com)

3 The above Financial Results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at its Meeting held on Tuesday, 27 January 2026. The Financial Results have been subjected to limited review by the Statutory Auditors of the Company and the auditors have expressed unmodified opinion.

By order of the Board of Directors of
Creamline Dairy Products Limited
Sd/-
Varadaraj Subramanian
Director

Place : Mumbai
Date : 27 January 2026

RAMKRISHNA FORGINGS LIMITED

RKFL

CIN No:L74210WB1981PLC034281
Regd. Office: 23 Circus Avenue, Kolkata - 700017
Phone: 033-4082 0900/ 033-7122 0900, Fax: 033-4082 0998,
email: secretarial@ramkrishnaforgings.com, Website: www.ramkrishnaforgings.com

Extract of Statement of the Unaudited Consolidated Financial Results for the Quarter and Nine-Months ended December 31, 2025

(All amounts in INR Lakhs, unless otherwise stated)

Sl. No.	PARTICULARS	Consolidated					
		Quarter - Ended			Nine-Months Ended		Year Ended
		December 31, 2025	September 30, 2025	December 31, 2024	December 31, 2025	December 31, 2024	March 31, 2025
		(Unaudited)	(Unaudited)	(Unaudited) (Restated)	(Unaudited)	(Unaudited) (Restated)	(Audited)
1	Revenue from continuing operations	1,09,851.60	90,753.00	1,07,378.18	3,02,130.19	3,08,689.31	4,03,410.68
2	Profit before tax from continuing operations	1,810.80	(1,027.09)	2,385.22	2,515.42	17,137.72	14,768.71
3	Profit for the year/period from continuing operations	1,356.89	(949.66)	2,090.17	1,585.86	13,175.84	33,155.05
4	Profit for the year/period before tax from discontinued operations	-	-	-	-	9,917.78	9,917.78
5	Profit for the year/period from discontinued operations	-	-	-	-	8,347.47	8,347.47
6	Profit after tax for the period	1,356.89	(949.66)	2,090.17	1,585.86	21,523.31	41,502.52
7	Total Comprehensive Income for the period / year	1,252.71	(749.51)	1,924.91	1,561.11	21,108.57	41,436.41
8	Paid-up Equity Share Capital (Face Value of ₹ 2/- per share)	**3,616.18**	**3,616.18**	**3,616.57**	**3,616.18**	**3,616.57**	**3,620.61**
9	Other Equity				-	-	**3,00,116.56**
	Earnings per equity share (for continuing operations) (₹) (Face value per share ₹ 2/- each)*						
	1) Basic	**0.75**	**(0.53)**	**1.16**	**0.88**	**7.29**	**18.33**
	2) Diluted	**0.75@**	**(0.52)**	**1.16^**	**0.87@**	**7.29^**	**18.33**
	Earnings per equity share (for discontinued operations) (₹) (Face value per share ₹ 2/- each)						
	1) Basic	-	-	-	-	**4.62**	**4.62**
	2) Diluted	-	-	-	-	**4.62^**	**4.62**
	Earnings per equity share (for continuing and discontinued operations) (₹) (Face value per share ₹ 2/- each)						
	1) Basic	**0.75**	**(0.53)**	**1.16**	**0.88**	**11.91**	**22.95**
	2) Diluted	**0.75@**	**(0.52)**	**1.16^**	**0.87@**	**11.91^**	**22.95**
	* not annualised ^ after considering impact of Employee Stock Option Plan (ESOP) @ after considering impact of Share Warrants						

Notes:

1 The above Unaudited Consolidated Financial Results have been reviewed by the Audit Committee and thereafter approved by the Board of Directors of the Holding Company at their respective meeting held on January 27, 2026.

2 Information on Unaudited Standalone Financial Results for the Quarter and Nine-Months ended December 31, 2025

(All amounts in INR Lakhs, unless otherwise stated)

Sl. No.	PARTICULARS	Quarter - Ended			Nine-Months Ended		Year Ended
		December 31, 2025	September 30, 2025	December 31, 2024	December 31, 2025	December 31, 2024	March 31, 2025
		(Unaudited)	(Unaudited)	(Unaudited) (Restated)	(Unaudited)	(Unaudited) (Restated)	(Audited)
1	Revenue from Operation	93,959.50	80,078.94	96,756.48	2,67,707.25	2,82,467.64	3,63,429.92
2	Profit Before Tax (after exceptional item)	1,811.54	49.34	1,736.59	4,798.40	24,114.46	22,356.91
3	Profit After Tax (after exceptional item)	1,311.69	36.92	1,525.69	3,499.76	19,390.31	40,182.01
4	Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after tax) and other Comprehensive Income (after tax)]	1,270.69	(4.09)	1,410.79	3,376.75	19,045.59	40,088.59

3 These above results is an extract of the detailed format of Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter and Nine Months ended December 31, 2025 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter and Nine Months ended December 31, 2025 are available on the company's website i.e. www.ramkrishnaforgings.com and the website of BSE Limited and National Stock Exchange of India Limited i.e. www.bseindia.com and www.nseindia.com respectively and can also be accessed by scanning the QR code given in this publication.

On behalf of the Board of
Ramkrishna Forgings Limited
Naresh Jalan
Managing Director
(DIN: 00375462)

Place : Kolkata
Date : January 27, 2026

Raymond LIMITED

Registered Office : Plot No.156/H No.2, Village Zadgaon, Ratnagiri 415 612 (Maharashtra)
CIN:L17117MH1925PLC001208
Email : corp.secretarial@raymond.in; **Website:** www.raymond.in
Tel: 02352-232514, **Fax :** 02352-232513; **Corporate Office Tel :** 022-40349999, **Fax** 022-24939036

EXTRACT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED 31ST DECEMBER 2025

(₹ in lakhs, unless otherwise stated)

Sr. No.	Particulars	Quarter ended			Nine months ended		Year ended
		31.12.2025	30.09.2025	31.12.2024	31.12.2025	31.12.2024	31.03.2025
		(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
	Continuing Operation						
1	Revenue from Operations	55721	52769	46611	160919	138938	194684
2	Net Profit for the period before tax and exceptional items	2411	1912	453	7144	4510	7834
3	Net Profit for the period before tax after exceptional items	1012	(14828)	453	(10995)	4510	7834
4	Net Profit for the period after tax (Continuing operation)	710	1389	399	4161	2757	5202
	Discontinued Operation						
5	Profit from discontinued operation before tax-Lifestyle Business	-	-	-	-	727964	727964
6	Profit from discontinued operation before tax-Realty Business	-	-	8758	537386	21459	36969
6	Share of assosiate profit (Raymond Lifestyle Limited Erstwhile Raymond Consumer Care Limited)	-	-	-	-	1411	1411
7	**Net Profit for the period after tax (Discontinued operation)**	**-**	**-**	**6829**	**530753**	**747061**	**758360**
8	**Profit for the period**	**710**	**1389**	**7228**	**534914**	**749818**	**763562**
9	**Total Comprehensive Income for the period (Comprising profit for the period after tax and other comprehensive income after tax) net of non-controlling interests**	**(10623)**	**59607**	**5064**	**588080**	**759395**	**766940**
10	Reserves as shown in the Balance sheet	-	-	-	-	-	364959
11	Equity Share Capital (Face Value - ₹ 10/- per share)	6655	6655	6655	6655	6655	6655
12	Earnings per share (of ₹ 10/- each) (not annualised):						
	Continuing operation						
	(a) Basic	0.54	1.71	0.58	4.90	4.21	7.18
	(b) Diluted	0.54	1.71	0.58	4.90	4.20	7.17
	Discontinued Operation						
	(a) Basic	-	-	10.26	797.51	1122.53	1139.51
	(b) Diluted	-	-	10.23	797.51	1119.77	1138.82
	Continuing operation and Discontinued operation						
	(a) Basic	0.54	1.71	10.84	802.41	1126.74	1146.69
	(b) Diluted	0.54	1.71	10.81	802.41	1123.97	1145.99

Notes:

1 The Statement of Raymond Limited (the 'Company' / 'Holding Company') and its subsidiaries (referred to as 'the Group') together with Associates and Joint Ventures, have been prepared in accordance with the recognition and measurement principles of applicable Indian Accounting Standards ('Ind AS') notified under the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (as amended), as prescribed under Section 133 of the Companies Act, 2013 ('the Act'), and other accounting principles generally accepted in India and is in compliance with the presentation and disclosure requirements of Regulation 33 and Regulation 52 read with Regulation 63 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (as amended) ('Listing Regulations') and guidelines issued by the Securities and Exchange Board of India (SEBI).

2 Financial results of Raymond Limited (Standalone information) **(₹ in lakhs, unless otherwise stated)**

Particulars	Quarter ended			Nine months ended		Year ended
	31.12.2025	30.09.2025	31.12.2024	31.12.2025	31.12.2024	31.03.2025
	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
Income from Operation (Turnover)	181	9	220	289	485	609
Profit before tax (Continuing Operation)	(425)	(381)	743	772	4812	4969
Profit after tax (Continuing Operation)	(324)	(285)	928	571	3490	3594

3 The above is an extract of the detailed format of the Standalone and Consolidated Financial results for the quarter and nine months ended December, 2025 filed with the Stock exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.
The full format of standalone and consolidated results of the Company for the quarter and nine months ended December, 2025 are available to the investors at the websites www.raymond.in, www.bseindia.com and www.nseindia.com. The same can be accessed by scanning the QR code provided below.

4 The Statement has been reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on 23 January 2026 and 27 January 2026. There are no qualifications in the reveiw report issued for the quarter and Nine months ended 31 December 2025.

Mumbai
27 January 2026

Gautam Hari Singhania
Chairman & Managing Director

AXIS BANK LTD.

Regd. Office: 'Trishul', 3rd floor, Opp. Samartheshwar Temple, Near Law Garden, Ellisbridge, Ahmedabad - 380 006.
Corporate Office: Axis Bank Limited, Axis House, Pandurang Budhkar Marg, Worli, Mumbai - 400 025.
CIN: L65110GJ1993PLC020769, Phone: 079-66306161, Email: shareholders@axisbank.com

UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED 31ST DECEMBER, 2025

(₹ in crores)

PARTICULARS	Axis Bank (Standalone)			Axis Bank (Consolidated)		
	FOR THE QUARTER ENDED 31.12.2025	FOR THE NINE MONTHS ENDED 31.12.2025	FOR THE QUARTER ENDED 31.12.2024	FOR THE QUARTER ENDED 31.12.2025	FOR THE NINE MONTHS ENDED 31.12.2025	FOR THE QUARTER ENDED 31.12.2024
Total income from operations	38,500.06	1,14,416.44	36,926.14	40,898.41	1,21,069.26	38,959.17
Net Profit / (Loss) for the period (before tax, exceptional and/or extraordinary items)	8,629.78	23,062.77	8,378.22	9,370.64	25,046.28	9,006.76
Net Profit / (Loss) for the period before tax (after exceptional and/or extraordinary items)	8,629.78	23,062.77	8,378.22	9,370.64	25,046.28	9,006.76
Net Profit / (Loss) for the period after tax (after exceptional and/or extraordinary items)	6,489.57	17,385.35	6,303.77	7,010.65	18,782.22	6,742.29
Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	Refer note 1	Refer note 1	Refer note 1	Refer note 1	Refer note 1	Refer note 1
Paid-up equity share capital (Face value ₹2/- per share)	621.02	621.02	619.03	621.02	621.02	619.03
Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	1,77,997.47 (As on 31st March, 2025)	1,77,997.47 (As on 31st March, 2025)	1,49,617.69 (As on 31st March, 2024)	1,85,433.36 (As on 31st March, 2025)	1,85,433.36 (As on 31st March, 2025)	1,55,511.72 (As on 31st March, 2024)
Earnings per Share (Face value ₹2/- per share) (for continuing and discontinued operations) (₹) (not annualised)						
- Basic	20.91	56.05	20.37	22.59	60.56	21.79
- Diluted	20.80	55.73	20.25	22.47	60.20	21.65
Securities Premium Account	53,965.79	53,965.79	53,154.60			
Net Worth	1,89,970.87	1,89,970.87	1,64,978.66			
Outstanding Debts	2,17,866.35	2,17,866.35	1,89,255.38			
Outstanding Redeemable Preference Shares	Nil	Nil	Nil			
Debt Equity Ratio	1.11	1.11	1.10			
Capital Redemption Reserve	Nil	Nil	Nil			
Debenture Redemption Reserve	Nil	Nil	Nil			

Note:

1. Information relating to Total Comprehensive Income and Other Comprehensive Income is not furnished as Ind AS is not yet made applicable to banks.
2. The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results are available on the website of the Bank (www.axisbank.com) and on the Stock Exchange websites (www.nseindia.com and www.bseindia.com).
3. Previous period figures have been regrouped and reclassified, where necessary, to make them comparable with current period figures.

For and on behalf of the Board

Place: Mumbai
Date: 26th January, 2026

www.axisbank.com

AMITABH CHAUDHRY
MD & CEO

மத்திய அரசின் வி.பி. ஜிராம் ஜி திட்டத்தை கைவிட வலியுறுத்தி

பெங்களூரு கவர்னர் மாளிகையை முற்றுகையிட முயன்ற சித்தராமையா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் கைது

பெங்களூரு, ஜன.28

மத்திய அரசின் வி.பி. ஜி ராம் ஜி திட்டத்தை கைவிட வலியுறுத்தி கவர்னர் மாளிகையை முற்றுகையிட நடைபயணமாக சென்ற முதலமைச்சர் சித்தராமையா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால் பெங்களூருவில் பரபரப்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி 100 நாள் ஊரக வேலை உறுதி திட்டத்தின் பெயரை மத்திய அரசு மாற்றியுள்ளது. இதற்கு பதிலாக 125 நாள் வேலை வழங்கும் வகையில் வி.பி. ஜி ராம் ஜி என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. குறிப்பாக பா.ஜ.க. ஆட்சி இல்லாத மாநிலங்களான கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு உள்ளிட்டவை எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

ஏற்கனவே வி.பி. ஜி. ராம் ஜி திட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதுபோல் கர்நாடக அரசும் சட்டசபையில் இந்த திட்டத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில் கர்நாடக காங்கிரஸ் சார்பில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தை ரத்து செய்ததை கண்டித்தும், வி.பி. ஜி ராம் ஜி சட்டத்தை கைவிடக் கோரியும் மத்திய அரசை கண்டித்து போராட்டம் பெங்களூரு சுதந்திர பூங்காவில் நேற்று நடைபெற்றது. இதற்கு முதலமைச்சர் சித்தராமையா, துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இதில் கட்சி மேலிட பொறுப்பாளர் ரன்தீப்சிங் சுர்ஜேவாலா மற்றும் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் மத்திய அரசை கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கைகளில் ஏந்தி இருந்தனர்.

இதில் சித்தராமையா பேசியதாவது: கிராமப்புறங்களில் ஏழை மக்களின் துயர் துடைக்கும் நோக்கத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தை முந்தைய காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு அமல்படுத்தியது. இந்த திட்டத்தின் கீழ் தொழிலாளிகளுக்கு ஆண்டுக்கு குறைந்தது 100 நாட்கள் வேலை உத்தரவாதம் வழங்கப்பட்டது.

ஏழைகளுக்கு வேலை உரிமை என்பது அரசியல் சாசனத்துக்கு உட்பட்டது. ஆனால் இந்த உரிமையை மத்திய அரசு வி.பி. ஜி ராம் ஜி திட்டம் மூலம் பறித்துக் கொண்டுள்ளது. கர்நாடகத்தில் மட்டும் 71 லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர்.

இதில் 53 சதவீதம் பெண்கள், 28 சதவீதம் பேர் தலித், பழங்குடியினர் ஆவர்கள். 5 லட்சம் பேர் மாற்றுத்திறனாளி தொழிலாளர்களும் உள்ளனர். புதிய திட்டத்தின்படி வேலை செய்யும் இடம், வேலை நாட்கள் குறித்து மத்திய அரசே தீர்மானிக்கும். விவசாயிகளின் நிலங்களில் இந்த தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாது. மேலும் இந்த திட்டத்துக்கு மத்திய அரசு 90 சதவீதத்துக்கு பதிலாக 60 சதவீத நிதியை மட்டுமே வழங்கும். 40 சதவீதத்தை மாநில அரசு வழங்க வேண்டும். இது மக்களுக்கு எதிரான திட்டம் ஆகும். ஊரக பகுதி மக்களின் வேலையை பறித்துக்கொண்டுள்ளனர். இத்தகைய மக்கள் விரோத திட்டத்தை கொண்டுவர பா.ஜ.க.வுக்கு ஆர்.எஸ்.எஸ். உந்துசக்தியாக இருந்துள்ளது. ஏழை மக்கள் பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையக்கூடாது என்பது தான் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நோக்கம் ஆகும்.

அதனால் மத்திய அரசின் இந்த புதிய திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். ஏற்கனவே இருந்த மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். இதுதொடர்பாக கிராம, தாலுகா, மாவட்ட அளவில் போராட்டங்களை நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த போராட்டத்தில் பங்கேற்ற சித்தராமையா, டி.கே.சிவக்குமார் உள்பட அனைத்து காங்கிரஸ் தலைவர்களும், நிர்வாகிகளும் கூலி தொழிலாளர்கள் போல் துண்டால் தலைப்பாகை கட்டியிருந்தனர். சில தலைவர்கள் கைகளில் கருப்புநிற ரிப்பன் கட்டியிருந்தனர்.

இந்த போராட்டத்தை தொடர்ந்து முதலமைச்சர் சித்தராமையா, துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார், மேலிட பொறுப்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா மற்றும் அமைச்சர்கள் கவர்னர் மாளிகையை முற்றுகையிட நடைபயணமாக சென்றனர்.

ஆனால் கவர்னர் மாளிகைக்கு செல்ல போலீசார் அனுமதி அளிக்க வில்லை. இதனால் அவர்கள் தடையை மீறி நடைபயணம் செல்ல முயன்றனர். இதனால் போலீசாருக்கும், காங்கிரசாருக்கும் இடையே சிறிது நேரம் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து போலீசார் சித்தராமையா, டி.கே.சிவக்குமார் உள்பட 1,000க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். சித்தராமையா உள்ளிட்ட தலைவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்து போலீஸ் வாகனத்தில் ஏற்றினர்.

இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. சிறிது நேரத்திற்கு பிறகு கைதான அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதையடுத்து சித்தராமையா, டி.கே. சிவக்குமார், அமைச்சர்கள் உள்பட 26 பேர் மட்டும் லோக் பவனுக்கு (கவர்னர் மாளிகை) சென்று கவர்னர் தாவர்சந்த் கெலாட்டை நேரில் சந்தித்து, வி.பி. ஜி.ராம்.ஜி திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி, கோரிக்கை மனு கொடுத்தனர். அதன்பிறகு அங்கிருந்து அவர்கள் கலைந்து சென்றனர்.

காங்கிரஸ் கட்சியை இழிவுபடுத்திப் பேசிய தி.மு.க. எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை எடுக்க செல்வப்பெருந்தகை வலியுறுத்தல்

சென்னை, ஜன.28

காங்கிரஸ் கட்சியை இழிவுபடுத்தி பேசிய தி.மு.க. எம்.எல்.ஏ. கோ.தளபதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என செல்வப்பெருந்தகை வலியுறுத்தி உள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:–

மதுரை மாவட்டம் சுப்பிரமணியபுரம் பகுதியில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில், காங்கிரஸ் பேரியக்கத்தை அவமதிக்கும் வகையில் தி.மு.க. மாநகர செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பேசியிருப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கதாகும்.

கூட்டணி அரசியலின் மாண்பை மிதித்து, பொது மேடையில் காங்கிரஸ் பேரியக்கத்தையும், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இழிவுபடுத்திப் பேசிய தி.மு.க. மாநகர செயலாளர் கோ.தளபதியின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, முதலமைச்சரை தமிழ்நாடு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ராஜேஷ்குமார் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்பதுபோல் காங்கிரஸ் கட்சியை தாக்குவது பொறுப்பற்ற அரசியல்;

அடுத்த கட்சிகளின் சீட்டு விவகாரங்களில் தலையிடுவது அரசியல் நாகரிகமல்ல. காங்கிரஸ் கட்சியின் மூத்த எம்.பிக்களான மாணிக்கம் தாக்கூர் மற்றும் ஜோதிமணி ஆகியோரை குறித்து பேசப்பட்ட கருத்துகளுக்கு கோ.தளபதி எம்.எல்.ஏ. உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கூட்டணி குறித்து பேச தி.மு.க.வினருக்கு தடை: கட்சி தலைமை அதிரடி உத்தரவு

சென்னை, ஜன.28

கூட்டணி குறித்து பொதுவெளியில் பேசக்கூடாது என்று தி.மு.க. நிர்வாகிகளுக்கு கட்சி தலைமை அறிவுறுத்தி உள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.பி.க்கள் மாணிக்கம் தாகூர் (விருதுநகர்), ஜோதிமணி (கரூர்) ஆகியோர் தி.மு.க. கூட்டணிக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் மதுரையில் நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் மதுரை மாநகர தி.மு.க. செயலாளரும், மதுரை வடக்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான தளபதி, காங்கிரஸ் நிர்வாகிகள் குறித்து விமர்சித்து பேசினார். இதற்கு காங்கிரஸ் எம்.பிக்கள் மாணிக்கம் தாகூர், ஜோதிமணி ஆகியோர் பதிலடி கொடுத்தனர். இது தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் பரபரப்பை ஏற்படுத்தியது. காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகையும் கண்டன அறிக்கை வெளியிட்டார்.

இந்த நிலையில் கூட்டணி தொடர்பான கருத்துகளை பொதுவெளியில் பேசக்கூடாது என்று தி.மு.க. நிர்வாகிகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று வெளியிட்ட 'எக்ஸ்' பதிவில் கூறியிருப்பதாவது:

கூட்டணி, தொகுதிப் பங்கீடு மற்றும் கூட்டணிக்கட்சியினர் தொடர்பான கருத்துகளை தி.மு.க. நிர்வாகிகள் பொதுவெளியில் விவாதிப்பதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். தேவையற்ற சர்ச்சைகளினால் எவ்வித பலனும் இல்லை என்பதால் ஆக்கப்பூர்வமான கட்சி பணிகளில் கவனம் செலுத்தி தேர்தல் வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும். கூட்டணி தொடர்பான முடிவுகளை தி.மு.க. தலைவர் உரிய நேரத்தில் அறிவிப்பார்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சட்டமன்ற தேர்தல் முன்னேற்பாடுகள்: ஆய்வு செய்ய தலைமை தேர்தல் கமிஷனர் குழு அடுத்த மாதம் தமிழகம் வருகை

சென்னை, ஜன.28

தமிழக சட்டமன்ற தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்ய அடுத்த மாதம் (பிப்ரவரி) மத்தியில் தலைமை தேர்தல் கமிஷனர் தலைமையிலான குழு சென்னைக்கு வர உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இந்திய தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. பொதுவாக சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையில், அந்தந்த மாநிலங்களுக்குச் சென்று தலைமை தேர்தல் கமிஷனர் தலைமையிலான குழு 2 நாட்கள் தங்கி இருந்து தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்வது வழக்கம். பொதுவாக வாக்காளர் இறுதிப்பட்டியல் வெளியிடப்பட்டதும் இந்தக் குழு வரும்.பிப்ரவரி மாதம் 17ந் தேதியன்று தமிழகத்திற்கான இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. அதையொட்டிய தேதியில் இந்தக் குழு சென்னைக்கு வருகை தரும்.

இந்த வருகையின்போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள், வருமான வரித்துறை, வங்கிகள், அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட மத்திய அரசுத் துறைகளின் அதிகாரிகளை அழைத்து தலைமை தேர்தல் கமிஷனர் ஆலோசனை நடத்துவார். அதற்கு முன்னதாக தேர்தல் கமிஷனின் துணை கமிஷனர்கள் தமிழகம் வந்து ஆய்வு மேற்கொள்வார்கள்.

சிறப்பு தீவிர திருத்தப் பணியை முன்னிட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான கால அவகாசம் வரும் 30ந் தேதியுடன் (நாளை மறுநாள்) முடிகிறது. ஏற்கனவே கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு இருப்பதால் மேலும் கால அவகாசம் அளிப்பதற்கு வாய்ப்பில்லை என்று தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

குடியரசு தின விடுப்பு வழங்காத 264 நிறுவனங்களுக்கு அபராதம்: தொழிலாளர் துறை நடவடிக்கை

சென்னை, ஜன.28–

குடியரசு தின விடுப்பு வழங்காத 264 நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக தொழிலாளர் கமிஷனர் சி.அ.ராமன், சென்னை கூடுதல் தொழிலாளர் கமிஷனர் யாஸ்மின் பேகம் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, சென்னை முதல் வட்ட தொழிலாளர் இணை கமிஷனர் விமலநாதன் உத்தரவின்பேரில் சென்னை மாவட்டத்தில் தொழிலாளர் உதவி கமிஷனர்கள் தலைமையில் தொழிலாளர் உதவி ஆய்வாளர்களால் கடந்த 26ந்தேதி குடியரசு தினம் தேசிய விடுமுறை தினத்தன்று, சென்னை மாவட்டத்தில் உள்ள 173 கடைகள் மற்றும் நிறுவனங்களில் ஆய்வு செய்ததில் 123 முரண்பாடுகளும், 183 உணவு நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 141 முரண்பாடுகளும் கண்டறியப்பட்டது. 4 மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தில் ஆய்வு செய்யப்பட்டது. கடந்த 26ந்தேதி அன்று பணியாளர்களுக்கு விடுப்பு வழங்காத, முரண்பாடு காணப்பட்ட 264 நிறுவனங்களின் மீது தேசிய பண்டிகை விடுமுறை சட்டம் 1958ன் படி அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை 3ம் வட்ட தொழிலாளர் உதவி கமிஷனர் (அமலாக்கம்) சு.சிவக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தேசிய விடுமுறை தினத்தன்று பணிக்கு அமர்த்தியுள்ள தொழிலாளர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் அல்லது மாற்று விடுப்பு வழங்க வேண்டும். இதுதொடர்பாக தொழிலாளர் உதவி ஆய்வர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு அளிக்காத நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று கூறி உள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் 2வது கட்டத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு

புதுடெல்லி, ஜன.28

மக்கள் தொகை கணக்கெடுப்பின் 2வது கட்டத்தில்தான் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:– 2027ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த முழுமையான தகவல்கள் ஏற்கனவே கடந்த மாதம் 12ந் தேதி வெளியிடப்பட்டது. இருப்பினும், சாதி வாரியான கணக்கெடுப்பு குறித்து சிலர் திட்டமிட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயன்று வருகின்றனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு வழக்கம் போல் இரண்டு கட்டங்களாக நடத்தப்படும். முதல் கட்டத்தில் வீடுகள் பட்டியல் மற்றும் வீட்டு வசதி குறித்த கணக்கெடுப்பு நடைபெறும். இரண்டாம் கட்டத்தில் தான் சாதி வாரியான கணக்கெடுப்பு உள்ளிட்ட மக்கள் தொகை கணக்கீடு நடைபெறும்.

இந்த இரண்டாம் கட்டப்பணிகள் அடுத்த ஆண்டு (2027) பிப்ரவரி மாதம் நாடு முழுவதும் தொடங்கும். அதே சமயம், ஜம்மு காஷ்மீர், இமாசலபிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களில் பனிப்பொழிவு அதிகம் உள்ள பகுதிகளில் மட்டும், முன்கூட்டியே அதாவது வருகிற செப்டம்பர் மாதமே இந்த பணிகள் மேற்கொள்ளப்படும்.

முதல் கட்ட கணக்கெடுப்பு வரும் ஏப்ரல் 1ந் தேதி தொடங்க உள்ளது. இதில் கேட்கப்பட வேண்டிய 33 கேள்விகள் குறித்த அறிவிக்கையை மத்திய அரசு கடந்த ஜனவரி 22ந் தேதி வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.